Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 43 — No. 9

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 43 | சாதாரண புரட்டாசி 1970 செப்டம்பர் | இதழ் 8

உள்ளுறை — பக்கம்

உள்ளுறை	பக்கம்
தேவாரத்துள் காணும் சில தலக் குறிப்புகள்	251
திருப்பறியலூர்	253
டாக்டர் தணிகைமணி வ. சு. செங்கல்வராயப் பிள்ளை	256
கூத்தனும் தீர்த்தமும்	266
கருணையந்தாதி	279
மதிப்புரை	282

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக்கூட்ட அறிவிப்பு.

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் 27—9—70 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக்கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவுசெலவுக் கணக்கு, ஆண்டுவிழா, ஆங்கில சித்தாந்தா முதலியன பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் அவசியம் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர். (செயலாளர்)

நம் சமாஜச் சார்பில் "ருக்குமணி குக்கர்" திருவாளர் அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் நன்கொடையான நம் சமாஜக் கட்டட டிரஸ்டின் ஆதரவில் 9—8—70 ஞாயிறுமாலை திருமயிலை திருக்கபாலீச்சுரத்தில் வித்துவான் திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை அவர்கள் "சுந்தரர்" என்னும் பொருள்பற்றிச் சிறப்புறப் பேசினார்கள். தேவார ஆசிரியா திரு. முருகேச முதலியார் அவர்கள் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரத்தைப் பாராயணம் செய்தார்கள்.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகத்தின் சார்பில் காஞ்சிச்சிவதல வாரவழிபாடு 2—8—70, 16—8—70, 23—8—70 ஆம் நாள்களிலும் சோணாசல பாரதியார் 45-ஆம் ஆண்டு விழா 30—7—70 ஆம் நாளிலும் திருவேகம்பம், குமரகோட்டம் முதலிய திருக்கோயில்களில் நிகழ்ந்தன. திரு. திருஞான சம்பந்த முதலியார், திரு. K. வச்சிரவேல் முதலியார் ஆகியோர் கலந்து சொற்பொழி வாற்றிச் சிறப்பித்தனர்.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் அமைச்சராக 40 ஆண்டுகளுக்கு மேல் இருந்து ஆக்கப்பணிகள் பல புரிந்து பலராலும் நன்கு மதித்துப் பாராட்டப் பெற்று வந்த பெரியார் திரு. தெ. ச. சு. சோமசுந்தரம் பிள்ளை யவர்கள் 6—8—70 காலை இறைவன் திருவடி நீழலடைந் தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம் சமாஜத்தோடு நெருங்கிய தொடர்புடைய சபை களுள் ஒன்று தூத்துக்குடி சைவசித்தாந்த சபையாகும், அச்சபையின் செயலாளர் மறைவு நம் சமயத்திற்கே பேரிழப்பாகும். எல்லாம் வல்ல இறைவன் அப்பெரியாரின் ஆன்மா நன்னிலையடைய அருள்புரிவானாக என்று சமாஜத்தினர் யாவரும் அவனருளையே வேண்டி வணங்கு கின்றோம்.

Reg. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 43	சாதாரண ஞூ புரட்டாசி செப்டம்பர் 1970	இதழ் 9

தேவாரத்துள் காணும் சில தலக் குறிப்புக்கள்.

ஆசிரியர்

ஞானசம்பந்தர் ஆதிய சமயாசாரியர் வரலாறுகள் சேக்கிழாருடைய பெரியபுராணத்துள் மிகவும் விளக்கமாய்ச் சொல்லப்பட்டுள்ளன. தேவாரத் திருமுறைகளை ஊன்றிப் பயின்று வரும் போது, அபூர்வமாய்ச் சில இடங்களில் பல புதுக் குறிப்புக்கள் கிடைக்கின்றன. இவை பெரிய புராணத்துள் சொல்லப் பெறவில்லை. அப்படியே சமயாசாரியர் வரலாறுகள், பல தலங்களில் அவ்வத் தலத்துக்குரிய தனிச்செய்திகளாக ஆங்காங்கு வழங்கி வருகின்றன. இவை முழுமையும் உண்மையான செய்திகள் என்றோ, ஆதார பூர்வமானவை என்றோ, நாம் கருதுவதற்கு இல்லையாயினும், இவற்றால் சுவையான பல வரலாறுகள் கிடைக்கின்றன என்பது உண்மை. ஒரு பகுதி தல அபிமானத்தால் விளைந்தது ஆகலாம்; ஒரு பகுதி புனைந்துரையாகவும் இருக்கும். இவை அனைத்தையும் ஒருசேரத் தொகுத்தால், இக்கதைகள் ஓரளவு பயனுடையனவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மூவலூரில் சம்பந்தர் பற்றிய வரலாறும், பாண்டூரில் அப்பர் பற்றிய வரலாறு ஒன்றும் சென்ற ஆண்டுகளில் சித்தாந்தம் இதழில் குறிப்பிட்டிருக்கிறோம். சம்பந்தர் பாலை

நெய்தல் பாடிய வரலாறு, சேக்கிழார் பெருமானால் சொல்லப் பெறவில்லை. ஆனால் நம்பியாண்டார் நம்பியும், திருக்களிற்றுப் படி உடையாரும் இதை விரித்து எழுதுகிறார்கள். இதைப் பின்னொரு சமயம் விளங்கக் குறிப்பிடுவோம். இப்போது, திருஞானசம்பந்தர் திரு ஆமாத்தூரில் கூறும் குறிப்பு ஒன்றை மட்டும் காட்ட விரும்புகிறோம்.

சம்பந்தர் திருவதிகை வழிபட்டுப் பாடி, திருஆமாத்தூர் சென்று அணைந்து, அங்கு இறைவன் அடிபோற்றி, "குன்றவார் சிலை" என்னும் திருப்பதிகம் பாடி, பின் திருக் கோவலூர் சேர்ந்தார் என்று மட்டுமே சேக்கிழார் சொல்லு கின்றார். 'குன்றவார் சிலை' என்ற இப்பதிகம் வினாவுரையாக உள்ளது. "விடையேறும் வேதியனே! நீ மும்மதில் வென்ற வாறு எங்ஙனே?" என்றவாறு இதன் பாடல்கள் அமைந் துள்ளன.

இதன் ஐந்தாம் பாடல் பின்வருவது:

தொண்டர் வந்து வணங்கி மாமலர்
    தூவி நின்கழல் ஏத்துவார் அவர்
உண்டியால் வருந்த, இரங்காதது என்னை கொலாம்?
வண்டலார் கழனிக் கலந்து
    மலர்ந்த தாமரை மாதர் வாண்முகம்
அண்டவாணர் தொழும் ஆமாத்தூர் அம்மானே.

இப்பாடலில் "திருஆமாத்தூர் அம்மானே! உன்னைத் தொண்டர்கள் வந்து வணங்கி, மாமலர் தூவி நின்கழல் ஏத்துகின்றார்கள். அவர்கள் உண்டிப்பொருட்டால் வருந்தி யிருக்கவும், நீ இரங்காதது என்னை கொல்?" என்று கேட் கின்றார். இச் செய்திக்கு விளக்கம் நமக்குக் கிடைக்கவில்லை. திருவீழிமிழலையில் அப்பரும் சம்பந்தரும் சென்று வழிபட்ட காலத்து, அங்கு ஒரு பஞ்சம் நிலவியது என்றும், பெருமான் இவ்வடியார் இருவருடைய அடியவர்களும் பஞ்சநிலையால் துன்புறாதபடி படிக்காசு நல்கினார் என்றும் சேக்கிழார் விரித்துக்கூறுகின்றார். ஒருகால் அதுபோன்ற ஒரு பஞ்சம் அக்காலத்தில் திருஆமாத்தூரில் நிலவியது, அதனையே சம்பந்தர் தம்பதிகத்துள் இவ்வாறு குறிப்பிட்டார். பின்னர் பஞ்சம் நீங்குமாறு பெருமான் அருள் செய்தார் என்று நாம் கருத இடமுண்டு, இதற்கு வேறுவகையில் விளக்கம் இல்லை.

திருப்பறியலூர்

(மூ. அ.)

இடம் :- மாயூரம் தாலுக்கா செம்பொன்னார் கோயிலில் இருந்து தெற்கு நல்லாடை செல்லும் சாலையில் 2 பர்லாங் போய் சாலையில் இருந்து தென்மேற்காகப் பிரிந்து செல்லும் மண் சாலையில் 1½ கல் தொலைவில் இவ்வூர் இருக்கிறது. பேச்சு வழக்கில் இவ்வூர் பறசலூர் என வழங்கும். வசதிக் குறைவான எளிய மக்கள் வாழும் இடம்.

கோயில் :- இத்தலம் "பூமன் சிரம் கண்டி" என்ற தனிப்பாடல் குறிப்பிடும் அட்ட வீரட்டத்தலங்களில் ஒன்று. அப்பரும் குறிப்பிடுகிறார். சுவாமி திருநாமம் வீரட்டேசுவரர், மாமனாகிய தக்கனைச் சங்கரித்த வீரட்டச் செயல் இங்கு நிகழ்ந்தது. அம்பிகை இளம் கொம்பனையாள்; இளம் கொடி என்று சம்பந்தர் தேவாரத்துள் குறிப்பிடுகின்றார். "நாளும், திருப்பறியலூரில் திகழும் இளம் கொம்போடு, இருக்கும் புகழ்வீரட்டேசா," தக்கன் யாகம் செய்தமையால் தட்சபுரம் என்பதும் ஊர்ப்பெயர். தல விருட்சம் பாரிசாதம்.

மூர்த்தி :- வீரட்டேசுவரர் இங்கு பிரதான மூர்த்தி; அட்ட புஜங்கள் உடையவர். திருவடியில் தக்கன் கிடக்கிறான். பீடத்தின் கீழே தக்க யாகக் காட்சி பித்தளைத் தகட்டினால் செய்து சாத்தப்பட்டுள்ளது. நடராஜா சிறியமூர்த்தி. வலப்பக்கத்தில் தனியே காசி விசுவநாதர் கோயில்; சந்நிதியில் வைரவமூர்த்தி; உற்சவ முருகன், நின்று கொண்டு தாழ இருக்கும் மயிலின் மீது தமது இடக்காலைத் தூக்கி வைத்திருக்கின்ற அழகிய கோலம். உற்சவ சம்பந்தமூர்த்தி மட்டும் இருக்கின்றார்; ஆடுகின்ற பிள்ளைத்திருவுரு. மிகவும் சிறப்புடைய இவ்வீரட்டத் தலத்தில் இடம் துப்புரவாக இருக்கின்றதே இன்றி மூர்த்திகள் துப்புரவாக இல்லை. எல்லா மூர்த்திகளும் அதிகக் களிம்பேறி கவனிப்பார் அற்று உள்ளன. நிருதியில் விநாயகர், மற்றப் பரிவார மூர்த்திகள் உள்ளனர். லிங்கோற்பவர் நல்ல தோற்றம் உடையவர்.

விழா :- கார்த்திகை ஞாயிறில் சுவாமி புறப்பட்டுத் தீர்த்தம் கொடுக்கிறார். தீர்த்தம் சிவகங்கை என்றும் சந்திர புட்கரணி என்றும் பெயர் பெறும்.

வரலாறு :- தாரகாசுரன் பயம் இவ்வூரில் நீங்கிற்று. (பறிக்கப்பட்டது) தக்க யாகத்துக்கு வந்த தேவர்களின் திமையை இங்கு இறைவன் பறித்து விட்டார். புற்கலன் என்பவன் இங்கு வந்த எழுமுனிவர்களுடைய குடை முதலியவற்றைப்பறித்து விட்டுப் பின் பாவநீக்கம் பெற்றான்; இவனே பின்னர் வால்மீகியாகப் பிறந்த தாலும் இவ்விதப் பறியல்களாலும் வழிபடுவோர் பலத்தை இறைவன் பறித்ததாலும் இவ்வூர் பறியலூர் ஆகும். சிவ பிரானை அறியாத தக்கன், தன் பெண்ணை அவர் மணந்த காரணத்தால் அவரை மதியாதவனாகி இங்கு திருமாலை நோக்கி யாகம் செய்ய முற்பட்டான். யாகம் காணவந்த தன் மகளையும் அவன் இழித்துப் பேசினான். இச்செயதியை அறிந்த சிவபிரான் வீரபத்திரரைத் தோற்றுவித்து அனுப்ப அவர் யாகத்தில் அவி உண்ணவந்த தேவர் அனைவரையும் தண்டித்தார். பின் தக்கனுக்கு ஆட்டுத் தலையளித்து ஏனையோரையும் எழுப்பி யாகத்தை மூட்டுவித்தார். தக்க யாக சம்காரம் நடந்த இடம் இதுவே.

பாடல் :- சம்பந்தர் ஒருபதிகம். இப்பதிகம் முழுவதிலும் திருப்பறியலூரில் வீரட்டர்தானே என்று பாடுகிறாரே ஒழிய தக்கனை அழித்தமை சொல்லவில்லை என்பது கருதத்தக்கது. அப்பர் ஒருபாடலில் குறிப்பிடுகின்றார். திருவாவடுதுறை ஆதீனத்துப் பின்வேலப்ப தேசிகர் பாடிய ஸ்தல புராணம் இவ்வூருக்கு உண்டு. பாடல் 655. அருணகிரி நாதர் ஒரு திருப்புகழ்ப் பாடலில் (126) இவ்வூரைக் குறிப்பிடுகிறார். "மேழகச் சென்னி தன்னை மங்கல மாமற்கு ஈந்த மருகனார் இருக்கை காண்மின்" என்று இவ்வூரைத் திருவிளையாடற் புராண அருச்சனைப் படலம் குறிப்பிடும்.

டாக்டர் தணிகைமணி
வ. சு. செங்கல்வராயப் பிள்ளை

(எஸ். டி. குமார் பி. ஏ.)

இப்பெரியார் தம் 87–ஆவது அகவை 15—8—70 அன்று நிறையும் பேறு எய்தியுள்ளனர். தமிழுக்கும் சைவத்திற்கும் இவர் செய்துள்ள தொண்டுகள் மிகச் சிறந்தன என்பதை யாவருமறிவர். ஆனால் இவர் தம் வாழ்க்கைவரலாற்றினை மிகச் சிலரேயறிவராதலால், இக் கட்டுரையில் பலரும் அறியும் பொருட்டு அவர்தம் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் செய்துவரும் சமய, தமிழ்த் தொண்டினைப் பற்றியும் வரையலாயிற்று.

தோற்றம் :– தணிகைமணியவர்கள் திரு. வ. த. சுப்பிரமணியப் பிள்ளை (மாவட்ட நடுவர்) அவர்கட்கும், திருமதி தாயம்மையாருக்கும் 15—8—1883–ல் மஞ்சக் குப்பத்தில் தோன்றினர். மூத்தவர் திரு. வ. சு. சண்முகம் பிள்ளையவர்களும் ஒரு மாவட்ட நடுவராக விருந்து சிறந்த பணியாற்றிச் சிவபதமடைந்தனர். இளையவர் திரு. வ. சு. ஆறுமுகம் பிள்ளையவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் பணிபுரிந்தார்கள். மிகவும் வேடிக்கையாகப் பேசும் வழக்க முடையவர். இவர்தம் மகனார் தற்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறையில் பேராசிரியராகப் பணியாற்றிவரும் டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி எம். ஏ., பி. எச். டி. ஆவார்.

இவர்தம் தந்தையார் பல நூல்களுக்கு ஆசிரியர். அவற்றுளெல்லாம் சிகரம் வைத்தது போன்றது அவர் மிகவும் அருப்பாடுபட்டு அயராது உழைத்து வெளியிட்ட திருப்புகழ்ப் பதிப்புகள். அவை வெளிவந்திலையாயின் முறையான தற்போதுள்ள வரிசைப்படுத்திய திருத்தமான திருப்புகழ்ப் பாக்களை இழந்திருப்போம். அதுபோல ஒன்று சிவஸ்தல மஞ்சரி என்ற ஒப்பற்ற நூல். இதற்குறித்து சைவ உலகம் இவருக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளது.

இளமைப்பருவம் :- இவர் பள்ளிப்படிப்பு நாமக்கல்லில் ஆரம்பமாயிற்று. பின் கும்பகோணத்திலும், திருவாரூரிலும் மதுரையிலும் தொடர்ந்தது. பள்ளியில் படிக்கும் போதே இவர் மிகச்சிறந்து விளங்கினார் என்பதற்கு அவர் தந்தையின் நாட்குறிப்பில் காணும் ஒரு குறிப்பு சான்றுபகரும்.

11—8—1899 The District Collector Mr. Putridge has Presented a Watch to Chengalvarayan for writing the best essay on the advantages of foreign travels. I am very happy to hear this news. Chengalvarayan is very hard working and god helps him” 'வெளிநாட்டுப் பயணங்களின் நன்மை' என்னும் பொருள்பற்றி ஒரு சிறந்த கட்டுரை எழுதியதற்காக மாவட்ட ஆட்சியர் பாட்ரிட்ஜ் துரை செங்கல்வராயனுக்கு ஒரு கடிகாரம் இனாம் தந்தார். இதுகேட்க எனக்கு மிக மிக மகிழ்ச்சியாயிருந்தது. செங்கல்வராயன் மிகவும் அரும்பாடுபட்டு உழைக்கிறான் அவனுக்கு ஆண்டவன் உதவுகிறான்' என்று எழுதியுள்ளார்.

இவரது கல்லூரிப்படிப்பு மதுரை நேடிவ் கல்லூரி (தற்போதைய மதுரைக் கல்லூரி) யில் (F. A.) ஆரம்பித்தது. பின் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் 1903 ல் B. A. ல் 'University First' பல்கலைக்கழகத்திலேயே தமிழில் முதலாவதாகத் தேர்ச்சிபெற்று கல்லூரி, பல்கலைக்கழகப் பொற்பதக்கங்கள் இரண்டினையும் பெற்றார். அதே ஆண்டு மதுரைத்தமிழ்ச் சங்கப்பரீட்சையிலும் முதலாவதாகத் தேறினார். பின் 1905 ல் M. A. பரீட்சையில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார். அப்போது இவர் எழுதிய Thesis (கட்டுரை) History of the tamil prose literature (தமிழ் உரைநடை இலக்கிய வரலாறு) என்னும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரை தமிழ் ஆராய்ச்சி செய்யும் மாணவர்க்கு இன்றியமையாத முதல் நூலாகத் திகழ்ந்து வருகிறதென்றால், அதன் உயர்வினை என்னென்பது! இவரது

ஆசிரியர்களாக பரிதிமாற்கலைஞரும், மறைமலையடிகளும் வாய்த்ததனால் தான் இத்தகைய சிறந்தநூல் ஒன்று வெளி வந்தது போலும்.

உத்தியோக பருவம் :– இவர் 1905ல் பத்திரப் பதிவுத்துறை இலாகாவில் முதலில் ரூ 325 ஊதியத்தில தான் சேர்ந்தார். பின் படிப்படியாக உழைத்து முன்னேறி மாவட்டப் பதிவுத்துறை அலுவலராக உயர்ந்தார். இவரது பணிகள் சென்னையிலும், திருநெல்வேலியிலுந்தான் அமைந்தது. கடைசியாக இவர் பத்திரப்பதிவுத்துறைத் தலைமை அதிகாரியின் நேர்முக உதவியாளராக (Personal Assistant to the Inspector General of Registration) விருந்து 1938ல் ஓய்வு பெற்றார். அப்போது இவர் செய்த அரிய சேவைகளைப் பாராட்டி ஒரு விசேச அரசுவிதழ் (Special Government gazetteer) வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் இப்பெரியாருக்கு முதலில் 'ராவ்சாகிப்' என்ற பட்டமும், பின் 'ராவ்பகதூர்' என்ற பட்டமும் அரசினால் வழங்கப்பட்டன.

திருமதி சாரதாவென்ற அம்மையாரை இவர் 1930ல் மூன்றாம் தாரமாக மணந்தார். இவ்வம்மையாரே (அடியேனது அத்தைமகளார்) சிவா என்று அழைக்கப் படுவார். இவர்கட்கு இரண்டு பெண்களும் ஒரு மகனும் இருக்கிறார்கள்.

மூத்தமகள் திருமதி ஞானபூரணி சென்னை மாநிலக் கல்லூரியில் எம். ஏ. தேர்ச்சிபெற்று சின்னாள் காரைக்குடி அழகப்பா பெண்கள் கல்லூரியில் பேராசிரியையாகவிருந்து, பின் பம்பாயிலுள்ள அணுவாராய்ச்சி நிலையத்தில் இளநிலை விஞ்ஞானியாகப் (Junior Scientific Officer) பணி புரிகிறார். இவர் அரசினரால் அமெரிக்காவிற்கு அனுப்பப் பட்டு அங்கே இரண்டு ஆண்டுகள் தங்கிப்படித்து 'M. S.' பட்டம் பெற்றுத் திரும்பினார். பின் திரு மத்வநாத் என்ப

வரை மணம்புரிந்து கொண்டு இருவருமாக அமெரிக்கா சென்றிருக்கிறார்கள். கணவர் Ph. D. படித்து வருகிறார். இப்போது இவர்கட்கு ஓர் ஆண்மகவு பிறந்து 'ஸ்ரீகணேசன்' எனப்பெயரிட்டுள்ளனர்.

அடுத்த மகள் செல்வி சசிவல்லி என்பார் சென்னை மாநிலக் கல்லூரியில் M. A. தேர்ச்சி பெற்றுப் பல்கலைக் கழகத்தில் Ph. D. பட்டம் பெற்று, தற்போது கிறித்தவ மகளிர் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்துவருகிறார். மகன் செல்வன் கணிகைநாயகன் B. Sc., தேர்ச்சி பெற்று B. E., படித்து வருகிறார்.

தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும்:— இவர் இளமைக்காலந்தொட்டே தமிழில் கவியியற்றுவதில் வல்லவர். பற்பல சமயங்களில் பற்பல பாக்களையியற்றியுள்ளார். அவை பல சிறு சிறு வெளியீடுகளாக வெளிவந்துள்ளன. இவரது கடிதங்கள் சில வெண்பாக்களிலேயே அமைந்திருக்கும். அடியேன் மிக நெருங்கிய உறவினர்களிலொருவன் என்ற முறையிலும், தமிழ்ப்பற்று கொண்டவன் என்ற முறையிலும் எனக்குப் பல சமயங்களில் கடிதம் எழுதி ஆறுதலும், தேறுதலும் தந்து ஊக்கமூட்டியுள்ளார்கள். அவைகளில் சில நோக்குவோம்:—

16—6—1941ல் எனது தந்தையாரை இழந்தபோது:—

அன்ப!

உனது அருமைத் தந்தையார் காலமானது கேட்டு நாலும் சிவாவும் பெரிதும் வருந்தினோம். விதியினை யாவரே வெல்ல வல்லார் எனத்தெரிந்து மனத்தைச் சாந்திபெறச் செய்க.

"யாரறிவார் சாநாளும் வாழ்நாளும்" என்றுரைத்த
பேரறிஞர் சம்பந்தா பீடுபெறும்—ஒருரையின்
உண்மை நிலையுணர்ந்தே உள்ளந் தெளிவுற்றுத்
திண்மைபெறல் நல்லதெனத் தேர்.

தந்தையும் போயினரென் றுள்ளந்தளரேல்நீ;
எந்தை முருகன் இணையடிக்கீழ்ச்—சொந்தமாச்
சென்று சுகம்பெற்றுச் சீரோக என்றுணர்ந்து
நின்று கவலைவிடு நீ.'' என்றும்

15—1—1646 ல் சிங்கப்பூரில் திருவாதிரை நாளன்று சிவ தரிசனம் பெற்றபோது,

"My Dear K, மார்கழி 7, 10, ஜனவரி 1 தேதியுள்ள கடிதங்கள் கிடைத்தன. திரைகடற்கப்புறம் சென்றும் சிவதரிசனம் திருவாதிரை நன்குளிற் கிடைத்தது'' என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து முன்னை நீ புரி நல்வினைப்பயன்'' எனப்போற்றத்தக்கதா யிருக்கிறது. சிங்கப்பூர் முதலிய எங்குப் போயினுமென்? இறைவன் நமதுநிழல்போல உள்ளத்தே திகழ்ந்து தோன்றாத்துணைவனுய்த்துலங்குகின்றனன். இறைவன் படைத்த பலவகை நிலம், பலவகை மக்கள், பலவகைக் காட்சி, இறைவனைக் காணும் பாக்கியம் பெற்றதும் பூர்வபுண்ணியமே'' என்றும் 16-2-1946 ல் மலேயாவில் அடியேன் ஒரு கப்பல் சுரங்க வெடிவிபத்தில் சிக்கித்தப்பியபோது:

"We are thankful to god for surving you from the Bomb explosion. வெடி *விபத்தினின்று உன்னைக் காப்பாற்றியதற்குக் கடவுளுக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம்.

பண்டென் வினையை யொழிக்கத்தான் பொன்னடிப்பத்திதந்த
கண்டென் மொழிவள்ளி காந்தன்கடம்பன் கருணையுண்டேல்
தண்டென்செயுப? பகைதானென்செயும்? அத்தளங்கள்விடு
குண்டென்செயும்? விஷப்பாம்பென்செயும்? இக்குவலயத்தே.''

(* Bomb பின்னர் இதையொட்டியே திருப்புகழ்ப் பாராயணக் குண்டு என்னும் சிறுநூல் வெளியிட்டு எனக்கு ஒரு படியும் அனுப்பிவைத்தார்)

27—3—1946ல் பட்டர்வொர்த் என்ற ஊரில் முடிசூடா மன்னராக விளங்கிய மனிதருள் மாணிக்கமெனப் போற்றிய பண்டிதநேரு அவர்களைக்கண்டு அளவளாவியதற்கு:

your letter dated 27—3—46 intimating your interview with Shri Nehruji. As you rightly say you were lucky in getting that chance to meet that great soul. ஸ்ரீ நேருஜியுடன் பேட்டி பற்றி எழுதிய உனது 27-3-46 கடிதம் கிடைத்தது. அப்பெரிய மனிதரைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றதால் நீ சொல்வது போல நீ அதிருஷ்டம் செய்தவன்'' என்றும்

9—7—46ல் ஆலயப்பணி செய்யும்போது:

"We are pleased with all your activities there. May god bless you and may your attempts prove successful. அங்கே உனது செயல்களைத் தெரிந்து மகிழ்ச்சியுற்றோம். உனது பணிகள் நிறைவேறக் கடவுள் ஆசிர்வதிப்பாராக.

நல்லன செய்வதிலே நாட்டங்கொள் என்அன்ப!
வல்லனவும் ஈசன் வரமிருந்தால்—மெல்ல
எளிதில் முடியும்; இதற்கைய முண்டோ?
உளிதகர்க்குங் கற்றூணை யும்'' என்றும்

Your ambitions should be very high, for as the poet says. உனது குறிக்கோள் மிக உயர்ந்ததாயிருக்க வேண்டும்

யானை வேட்டுவன் யானையும் பெறுமே
(புறநானூறு—214) என்றும்

பற்பலகால் என்னை ஊக்குவித்திருப்பதை நினைக்கின் என் மனம் மகிழ்ச்சியுறுகிறது.

நூற்பணி:- இவருக்குத் தமிழ்த் தொண்டாற்ற இளமை முதற்கொண்டே பேரவா இருந்ததெனினும், சிறு

சிறு நூல்களை அவ்வப்போது வெளியிட்டாலும் தனது உத்தியோக காலத்தில் பெருநூல்கள் எதையும் வெளியிடயியலாமற் போயிற்று

1920 ல் திருப்புகழ்ப் பதிப்பாசிரியரான தனது தந்தை திரு. வ. த. சுப்பிரமணியப்பிள்ளையவர்களின் சரித்திரத்தை வெளியிட்டார்.

1938 ல் ஓய்வுபெற்றபிறகே தனது முழுக் கவனத்தையும் தமிழுக்கென ஒதுக்கிப் பணியாற்ற முனைந்தார். 1947 ல் தான் மிகவும் அருப்பாடுபட்டு அரிய ஆராய்ச்சி செய்து வெளியிட்ட நூல் "அருணகிரிநாதர் வரலாறும் ஆராய்ச்சியும்" என்பதாம்.

ஒரு அரிய தமிழ்த் தொண்டு நிலையான தொன்றுகச் செய்ய வேண்டுமென்ற பேரவா பலநாட்களாக இவருக்கிருந்து வந்தது. ஞானவரோதயர் அருளிய "உபதேசகாண்டம்" என்பதை மூலச்சுவடியினின்று பன்னெடுநாட்கள் ஆராய்ந்து எழுதி முடித்ததை அரசாங்கமே 1950 ல் இரண்டு பகுதிகளாக நூலக வெளியீடாக (Oriental Library Publication) வெளியிட்டுள்ளது.

1906 ல் M A. வகுப்பில் தமிழுடன் மலையாளம் படித்தபோது அம்மொழியிலுள்ள காசிமஹாத்மியம் என்றதைத் தமிழில் பாக்களாக வெளியிட்டார். காசியைத் தரிசிக்க மிக்க ஆவாவும் கொண்டிருந்தார். ஒருநாள் கனவில் தான் காசிசென்றதாகவும், ஆனுல் அங்கு திருத்தணி மலையைத்தவிர வேறெதையும் காணுமையால், அதிலிருந்து திருத்தணிதான் அனைத்தும் என்று காசிசெல்லும் எண்ணத்தையே விடுத்து, திருத்தணிகேசனே எல்லாம் என்று அவனையே வழிபட்டு வருகிறுர். இவரது மகனுக்குத் "தணிகை நாயகன்" என்று பெயரிட்டே திருத்தணிகேசனை மறவாது வாழ்ந்து வருகிறுர்.

"தணிகைமணி" பட்டம் :- பழனியில் திருப்புகழ் மாநாடு 1949 ல் நடந்தபோது இப் பெரியாருக்குத் "தணிகை மணி" என்ற பட்டம் வழங்கப் பட்டது. இது குறித்துத்

தான் எழுதியுள்ள "தணிகை நாயகன் மாலை" என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

காயிலாக்கனியே! உன்னிலையாகக்
கருதுரு ஏழைநா யடியேற்
கேயவே "தணிகை மணி"யெனும் பட்டம்
எண்ணவை முன்புகு ரியனூர்
கோயிலாதீனத் தலைவர்மீ ஞக்ஷி
சுந்தர தேசிகக் கோமான்
வாயிலா அளித்த கருணையை மறவேன்
வரதனே! தணிகைநா யகனே.

திருப்பணித் திருப்படித்திருவிழா :- இப்போது ஜனவரி முதல தேதியன்று மிக விமரிசையாகவும் பிரசித்தமாகவும் நடந்துவரும் இப்பெரு விழா, முதன் முதலில் தணிகைமணி அவர்களின் தமையனார் திரு. வ. சு. சண்முகம் பிள்ளை பி. ஏ., பி. எல்., மாவட்ட நடுவர் அவர்களால் 1913 லிருந்து ஏற்படுத்தப் பெற்றது. தணிகைமணியவர்கள் குடும்பத்துடன் திருத்தணித் திருமுருகனைத் தரிசித்து வரலாயினர். 1916 லிருந்து வளளிமலை சச்சிதாநந்த சுவாமிகளும் அதன்பின் 1921 லிருந்து திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களும் இதில் கலந்து சிறப்பித்துவந்தனர். அதன் பின்னரே இப்பெருவிழா மிகச் சிறந்து நடந்து வருவதை நாமறிவோம்.

முருகவேள் பன்னிருதிருமுறை :- சைவத்திருமுறை பன்னிரண்டினைப்போலவே முருகவேள் திருமுறை பன்னிரண்டு என வகுக்குமுறை தணிகைமணியவர்களின் அருளுள்ளத்தில் தோன்றியதாகும். திருப்புகழ் முதலிய முருகன் அருட்பனுவல்களைப் பதினொருதிருமுறையாகப் பாகுபடுத்தித் தாம் அவற்றிற்கு உரையெழுதி 1952ல் வெளியிட்டும், 12-வது திருமுறையாகத் துறையூர் வரகவி சொக்கலிங்கம் பிள்ளை அவர்களைக்கொண்டு இயற்றிச் செய்துள்ள சேய்த்தொண்டர் புராணத்தைச் சேர்த்து "முருகவேள் பன்னிருதிருமுறை" என்று வெளியிட்டிருப்பதும் முருகபக்தர்கட்கிருந்த ஒரு பெருங்குறையைப்

போக்கியது. இவ்வாறு தணிகை நாயகனுக்கு ஒரு ஈடில்லாத் தொண்டினைச் செய்தது போற்றத்தக்கதாம்.

தேவார ஒளிநெறி :- திருமுறைக்கும் ஒரு விலையான பணியினைச் செய்யலாமென நினைத்து திருமுறைகளிற் சொல்லப்பட்ட எல்லாப்பொருள்களையும் அகரவரிசையிலமைத்தார். அப்பொருளை விளக்குஞ் சொற்களும்; தொடர்களும் பாட்டு எண்களுடன் அமைக்கப் பெற்றுத் தருதல் வேண்டுமென்பதை — அகராதியில் ஒரு சொல்லை எடுப்பதுபோல எளிதில் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் முறை எதுவும் இல்லாத ஒரு பெருங்குறையினைப்போக்க ''ஒளிநெறி'' யென யமைத்தார். ''தேவார ஒளிநெறி'' என்று 7 திருமுறைகட்கும்

சம்பந்தர் தேவாரத்திற்கு 3 பகுதிகளாக 466 தலைப்புகளில் 1570 பக்கங்களும்

அப்பர் தேவாரத்திற்கு 2 பகுதிகளாக 190 தலைப்புகளில் 1070 பக்கங்களும்

சுந்தரர் தேவாரத்திற்கு 1 பகுதியாக 261 தலைப்புகளில 734 பக்கங்களும்

எட்டாந்திருமுறைக்கு :- திருவாசகம் 414 தலைப்புகளில் 736 பக்கங்களுமாக வெளிவந்துள்ளது. திருக்கோவையார் அச்சாகிக்கொண்டிருக்கிறது. விரைவில் வெளிவரும். இஃதன்றி ''ஒப்புமைப் பகுதி'' ஒன்றும் சேர்க்கப் பட்டுள்ளது. அது இன்ன பொருளடங்கிய தொடர் இன்ன இன்ன நூல்களிற் காணலாம் என்பதாகும். இதுவுமன்றி நூலிற்காணப்படும் ''இலக்கண நுட்பங்கள்'' தனிப்பகுதியாக விளக்கப்படுகின்றன.

தேவார ஒளிநெறிக்கட்டுரை - தேவார ஒளிநெறியிலுள்ள தலைப்புகளிற கண்ட சொற்களும், பொருள்களும் முறைப்படுத்திக் கட்டுரை வடிவிலே விளக்கி எழுதப் பட்டிருக்கின்றன. இந்நூற்களில்

சம்பந்தர் தேவாரத்திற்கு 180 தலைப்புகளில்
336 பக்கங்களும்

அப்பர் தேவாரத்திற்கு 194 தலைப்புகளில் 262 பக்கங்களும் சுந்தரர் தேவாரத்திற்கு 244 தலைப்புகளில் 286 பக்கங்களும் திருவாசகத்திற்கு 208 தலைப்புகளில் 336 பக்கங்களு மாக வெளியாகி யிருப்பதைக் காணலாம். திருக்கோவையார் அச்சிலிருந்து விரைவில் வெளிவரவிருக்கிறது.

இந்நூற்கள் ஆராய்ச்சியாளர்க்கு மட்டுமின்றிப் பொதுவாகத் திருமுறை நூல்களின் பெருமையினையும் சிறப்பினையும் அறியவிரும்பும் யாவர்க்கும் நன்கு பயன் படும்.

பல முதுபெரும் புலவர்களைக் கொண்டு பல லட்ச ரூபாய் செலவிடினும் எந்தப் பல்கலைக்கழகமும் செய்ய முடியாத ஈடில்லாத ஒரு பெருஞ்செயற்கரிய செயலைத் தணிகைமணி யவர்கள் தாம் ஒருவராய்த் தம் கையாலேயே செய்து முடித்துள்ளதை நினைக்கின் அவர்தம் அயரா உழைப்பினையும் மனோ உரத்தினையும் வியக்காமலிருக்க முடியாதன்றோ! இத்தகைய நூற்கள் எழுதுவதற்கு எல்லா இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்கள், சமய நூல்கள், மெய்கண்ட நூல்கள், புராணங்கள் ஆகிய பல நூற்களில் பெரும்புலமை ஒருவர்க்கு மிக இன்றியமை யாதது. அத்துடன் சமய இலக்கியங்களிலும் இறைவழி பாட்டிலும் மனம் ஒன்றி அழுந்திய பற்றும் மிகமிகத் தேவை. இவைகளுடன் ஆழ்ந்த தெளிந்த வினைவாற்ற லுடன் அளவிலாப் பொறுமையும் அவசியம். இப்படிப் பல நலங்களை ஒருங்கேபெற்றோரே இத்தகைய அருமை யான நூற்களை இயற்ற முடியும். தணிகைமணி ஐயா அவர்கட்கு இயற்கையிலேயே மேலே குறிப்பிட்ட நலங் கள் யாவும் ஒருங்கே இறைவனருளால் அமைந்துவிட்டது ஒரு மிகப் பெரிய விசேடம்.

இந்நூற்களனைத்தையும் அழகாக அச்சிட்டு வெளியிட திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகமே மேற்கொண்டு அரிய பணியினைச் செய்துள்ளது. இப்பெருமை இதன் தலைவர் தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை யவர்களையே சாரும்.

தணிகைமணி போன்ற இத்தகைய ஒரு பேரறிஞர் மேனாட்டிலிருந்து இப்படி ஒரு நூற்பணியினைச்

செய்திருப்பாரேல் அவருக்கு அவசியம் எப்படியும் ஒரு நோபெல் பரிசு எப்போதோ கிடைத்திருக்கும்.

இவர் மிக மிக அடக்கமானவர். எந்த வித விளம்பரத்தையும் விரும்பாதவர். ஒரு தரம் டாக்டர் சிதம்பரநாதஞ் செட்டியார் நக்கீரர் கழகத்தின் மூலம் ஒரு பாராட்டு இவருக்குத்தர எவ்வளவோ முயன்றும் இவர் ''நான் என்ன செய்துவிட்டேன், எனக்கெதற்குப் பாராட்டு'' எனத் தடுத்துவிட்டார். *

திருக்குறள் பீடம் அழகரடிகளும் அடியேனும் சென்று குருகுலத்தில் அளிக்கவிருக்கும் ஒரு பாராட்டினை யேற்கவழைத்தபோது–திருவாசகத்திலுள்ள 'வேண்டேன் புகழ்' என்ற வரியினைக் கோடிட்டுக் காண்பித்துத் தடுத்து விட்டார்.

'டாக்டர்'பட்டம் :- இவரது அரிய தமிழ்ச் சேவையினைப் பாராட்டி 1–9–69ல் வேந்தர் உஜ்ஜல்சிங் தலைமையில், துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அறிமுக உரையாற்றினர். அவ்வமயம் தணிகைமணி ஐயா அவர்கட்கு டாக்டர் (D. Litt) என்ற பட்டம் அளித்துத் தனக்குப் பெருமை தேடிக் கொண்டது மதுரைப் பல்கலைக் கழகம்.

பின் மதுரைத் திருவள்ளுவர்க்கழகம், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார், தமிழவேள் பி. டி. இராசன் போன்றோர் பொன்னாடை போர்த்தி மலர் மாலைகள் அணிவித்துச் சிறப்புச் செய்தது பெருவிருந்தாக அமைந்தது.

வாழ்த்தும் வணக்கமும் :- தணிகைமணி ஐயா அவர்கள் 15-8-70 அன்று தனது 87-ஆவது அகவை நிறைவை எய்தி 88-ஆவது அகவையில் காலடி வைக்கின்றார்கள்.

இந்த ஆயிரம் பிறைகண்ட அண்ணலார் நூறாண்டு நோயற்று வாழ்ந்து தமிழ்ப்பணியும் சமயப்பணியும் தொடர்ந்து செய்துவர, எல்லாம் வல்ல திருவேகம்பத் தெம்மானை வணங்கி வாழ்த்துவோமாக!

---

* சமாஜம் முயன்றபோதும் அவ்வாறே ஒருசமயம் தடுத்துக் கடிதம் எழுதியுள்ளார்கள் (துணையாசிரியர்)

சூத்தனும் தீர்த்தமும்

(சிவயோகி மா. இரத்தினசபாபதி பிள்ளை)

கண்ணுல் காணப்படுகிற பூமியைச் சுற்றி சமுத்திரம் மூன்று மடங்கு பரப்பளவில் சூழ்ந்துள்ளது. அதுபோலவே பிண்ட சொரூபமான உடலைச் சுற்றிலும் நான்கு மடங்கு பருமனுன ஆகாசக்கூறு சூழ்ந்துள்ளது. அதற்குப் பெயர் அண்டாகாயம். இந்த அண்டாகாயத்தில் பஞ்சபூத நாயகர்களான பிரமன, விஷ்ணு உருத்திரன், மகேசன, சதாசிவன் என்ற ஐவரும் இருநது இயக்குகின்றனர். சிறப்பான ஆகாயக் கூறுறை நடத்துபவர் சதாசிவராவார். இவர் நெற்றி நடுப்பிரதேசம் தொட்டு பிர்மரந்திரப் புழை வரையில் ஆட்சி செய்கிருர். இவரே அறிவு மயமாகவும் சடமயமாகவும் தொழில்படுத்துகிருர். பின்மூளையும் முன்மூளையும் ஒருங்கே தொழிற்படும்போது நனவு நிலை என்ற சாக்கிரம் அமையும். பின்மூளை தொழிற்படும்போது சாக்கிரம் நழுவி சொப்பனம் இருப்புக் கொள்ளும். சாக்கிர அறிவு கருவி கொண்டு அறிவது. சொப்பன அறிவு கருவிகொண்டறியாத அறிவு. பிடரிக்கண், விழிப்பு கொண்டால் சொப்பன உலகு என்ற உணர்வு மண்டலம் விழிப்படையும். இந்தப் பிடரிக் கண்ணுக்கு விவரம், இந்திரயோனி என்று உபநிஷத், சாக்தநூல்கள் கூறும். சைவநூற்களில் சத்தியோஜாத மூர்த்தம் என்று சொல்வர். இந்த சத்தியோஜாத மூர்த்தமே மேலிருந்து கீழ்நோக்கிச் செயல்படும்போது ஐந்து பூத நாயகரையும் தாங்கி பூவுலக வாழ்க்கை அமைக்கிருர். அப்போது சத்தியோசாத மூர்த்தி பிர்மரந்திரத்திலிருந்து மூலாதாரம் நோக்கிப் பாய்கின்ற சத்தியைப் பிரதானமாகப் பெற்று பிர்மா, விஷ்ணு, உருத்திரன், சரஸ்வதி, லக்ஷ்மி, உமை என்ற பெயரால பெரும்பாலும் கீழ்நோக்கிய சத்தியாகவும் ஒரு சிறு பகுதி மேல் நோக்கிய சத்தியாகவும் தொழிற்படுகின்றது. அப்போது அவை மாகேசுவரன், மாகேசுவரி, சதாசிவன், மனேன்மணி என்ற பெயர் பெறும். இந்த சக்திகளைத் தாங்கி நிற்பது சிவம் சத்தி என்ற முடிவான அறிவும், சத் என்ற பகுதியும் ஆகும். ஆன்மாவும் இந்த நிலையில் பொருந்தியே அறிபுருஷனுகவும் தொழில் புரிகி

ருன். இந்த மூன்றும் அறியாத நிலைகள். இவைகளை இராத்தினத்திரயம் என்று நூல் கூறும்.

இத்தகைய பேராற்றல் உடைய ஆன்மா தத்துவக் கூட்டத்தில் இருந்து தன்னை மறந்த நிலையே பிரகிருதி நிலையாக உள்ளது. தன்னுடைய உண்மை சொருபத்தை உணர்ந்து பிருகிருதியிலிருந்து மேனோக்கிய ஜீவயாத்திரை செய்ய முயலுவதே சிவயோகம்.

யோகம் என்ற சொல் சேர்க்கை என்ற பொருளைத் தரும். ஆன்மா என்ற ஒரே அறிவுதான் தத்துவங்களுடன் கலப்பு தோஷத்தினுல் பல பெயர்களைப் பெறுகிறது. சடத்தில் கட்டுண்டு தன்னை அறியாதபோது தேகாத்துமாவாக வுள்ளது. அப்போது பூதாத்துமாவாக இருந்து ஐந்து பூதநாயகர்களால் ஆளப்படுகிறது.

தான் சடமன்று, தான் ஒரு ஒளி மண்டலவாசி என்பதைக் குருவினுல் உணர்த்தப்பட்டபோது விந்து (ஒளி) நாதம் (Vibration) அமைந்து மாகேசுவர சதாசிவ மண்டலங்கள் விழிப்படைகிறது. இது ஜீவனின் நிலை. இதை உணர்ந்தபோது ஜீவாத்மா ஆகிருன். இது ஒரு அறியாத நிலைதான். இங்கு இம்மண்ணுலகில் வாழ்வனவற்றுடன் கூடி நாம் பல வேறுவகையான அறிவைப் பெறுகிறோம். நாம் பெற்ற அறிவு நம்மிடம் உள்ளது. அதன் தொடர்பானவை நம்மை விட்டு நழுவி நமக்கு அன்னியப் பொருளாய்விடுகின்றன. இதுபோலவே அறிவுடைய ஜீவனின் விந்து நாதமண்டலங்கள் விழிப்படைந்து அணுசதாசிவர், அஷ்ட வித்தியேசுவரர் என்றவர்களின் ஆக்ஞ மண்டலங்களில் கலந்து உயிரின் வல்லபத்தையும் அதனுல் செய்யக் கூடிய ஆற்றலையும் ஜீவன் உணருகிருன். இங்கும் அறிவைத்தேடிச் செல்லும் மேனோக்கு உள்ள மனம் உள்ளது. முந்திய நிலையில் உலகப் பொருளைப் பெற்றுப்போக போகங்களைச் சில நாள் துய்த்து மண்ணில் சிறப்பாக வாழலாம் என்ற ஆசைதான் தூண்டி நடத்திற்று. அதுபோலவே இங்கும் அறிவின் சத்தியைப் பெற சடத்திலும் வேருன சூக்ஷ்ம வடிவான சித்துருவில் பற்றுக்கொண்டு மேலமண்டல வாசியாக ஜீவன் முயலுகிருன்.

இந்த நிலைமையில் அவன் இரு துருவங்களுக்கிடையில் ஊசலாடுகிறான். ஒன்று மேல்நோக்கிச் செல்லும் பிர்மா காரவிருத்தி, மற்றொன்று இயல்பாக மனிதனிடம் உள்ள கீழ்நோக்கிப் பாயும் பிரபஞ்சப் பற்று. உலகாசையாக இருந்த சத்தியேதான் சித்துருவமான ஜீவசத்தியாக உள்ளது இந்த சக்தியைத்தான் குண்டலனி, ஆதாரசத்தி, சுத்தவித்தை, பிர்மவித்தியாம்பிகை, ஓம்காரி என்ற பல பேருடன் ஆன்றோர் வழங்குகின்றனர். வேறு பாஷையில் பிரணவயோகம் என்பர். பிரணவத்தில் தெளிவான அறிவுடன் பிரபஞ்சத்தில் கட்டுண்ணுது பிரபஞ்ச காரியத்தில் உழலுபவர்களுக்கு உதவும் சேவை மனப்பான்மையுடையோரை அணுகி நம் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்து நம்மைத் தூய்மை செய்த அன்னேரின் அருளாணைக்கு நாம் தொண்டு செய்யச் சித்தமாக நம்மைத் தயார் செய்துகொள்ளுதலே யோகசாதனைக்குரிய மார்க்கம்.

இதன் நோக்கம், மனித இயல்புக்கு இயல்பாகப்பெற வேண்டிய சாந்தி, உண்மை, ஒற்றுமை இவைகளை அறிந்து தாம் வாழ்ந்தும், பிறரை வாழவும் வகை செய்வதுதான். இதை ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் பயின்று பயின்று சிறிது சிறிதாக மூலாதாரச் சக்கரத்தின் இழுவையான பிரபஞ்ச இழுவையை விட்டு ஜீவதரியம் என்ற பிர்மரந்திர நோக்கம் வலுப்பட வலுப்பட ஜீவன் விளக்கம் பெறும். ஜீவதுரியம் என்றது ஊர்த்துவ சகஸ்ரதளம் ஆகும். 1008 இதழ் என்ற சகஸ்ரதளம் கீழ்நோக்கும் நிலை உள்ளவரையில் ஐம்புல காரியம் நடைபெறும். இது இறப்பையும் பிறப்பையும் அநுசரித்த நிலை. மேல்நோக்கிய சகஸ்ரதளத்தில் நிற்கும் நிலை கிட்டினவர் இரண்டு துருவங்களிலும் தொழிற்படுவர். இந்த நிலையை அடைவதே சிவயோக நோக்கம். இதன் முடிவு சிவஞானப் பிராப்தி. இதற்குச் சாதன நிலை வருமாறு :—

ஆகர்ய மண்டலத்தில் உள்ள அறிவு நிலைகளை சூரியன், சந்திரன், அக்கினி வாக்கு என்று பிரித்துள்ளனர். ஆன்மாவிற்குத் தகுதியாக மேல்மண்டல வியாபக அறிவு ஒளியமாகப்பிரகாச அணுக்களால் ஆகியவை. இவைகளை சூரியன் என்ற பேரிட்டுள்ளனர். இது திடசித்தம்

வைராக்கியம், அறிவு, ஆராய்ச்சி முதலிய தன்மைகளால் விருத்தியடைவது. இதன் தன்மை விருத்தி என்ற ஒன்றேதான். இதில் குறைவு என்பதும் இல்லை; குற்றம் என்பதும் இல்லை.

மற்றொன்று அறிவின் ஊட்டம் பெற உந்தப்படும் கிரியையின் சார்பான மனம். இதைத்தான் சந்திரன் என்றனர். இது இருளுக்கும் இடம்கொடுத்து பிரபஞ்ச நோக்கத்தில் செல்லும் சுபாவமுடையது. பண்பான அறிவு வளர வளர சமுதாய ஒற்றுமையும், நன்மை தீமையில் சமதிருஷ்டியும், சத்துவகுணமிகுதியும் பெற்று மக்கள் சேவையும், ஈசுவர சேவையும் பெற விருப்பங் கொண்டு அறிவின் விருத்தியில் மனம் உந்தப்பட்டுத் தொழில்படத்துவக்கம் பெறுகிறது. இச்சமயம் அறிவுக் காகவும், கடமைக்காகவும் இழுக்கப்பட்ட மனம் சந்தர்ப்ப வசத்தால் பிரபஞ்சக் கவர்ச்சியில் நின்றும் வைராக்கியத் தாலேயோ, சந்தர்ப்பவசத்தாலேயோ கீழ்த்துருவத்தின் இழுப்பு நிலை சிறிது சிறிதாகக் கெட்டு மாற்றமடைந்து மேல்துருவ மண்டலம் விழிப்படைகிறது. இந்த நிலை வந்த வர்களுக்குச் சில சில சமயங்களில் ஆழ்கடல் நிலம்போல நள்ளிரவிலும் ஒளி தென்படும். இவர்கள் சத்தியின் அருள் வீழ்ச்சிக்குள் வந்தவர்கள். இவர்களிடம் சாந்தம் பெருக ஆரம்பிக்கும். இவர்களிடம் பௌருஷம் பேசும் தன்மையிராது. ஆண்டவனின் அடிமை என்ற தாழ்ந்த மனப்பண்பு உதித்துப் பெண்ணுக்குரிய சுபாவ நலப்பண்பு கள் மிகுந்து அடங்கின சுபாவம் வளரத் தலைப்படும். இதன் விளக்கத்தைச் சந்திரனுக்குரிய கலைகளாகக் கொண்டு பிராசாத நெறி என்ற சிவயோக நெறியை ஆன்றோர் வகுத்தனர்.

அக்கினி என்ற தத்துவம், உடலில் உஷ்ணமாகவும், பார்வையில் ஒளியாகவும் பொருந்தி உடலையும் உயிரையும் ரக்ஷித்து வருகிறது. கிரியை என்ற பெயரினையுடைய எத னிலும் அக்கினி தாண்டப்பட்டு இடம்பெறுகிறது. மூச்சு விடுவது, எண்ணுவது, தொழில் புரிவது எல்லாம் அக்கினி யின் ஆற்றலே. இந்த அக்கினியே காயப்பகுதியிலும் உள்ளது; கருத்துப் பகுதியிலும் உள்ளது. கருத்துப்பகு

தியில் நன்கு பதிவுற்றபோது ஒளி உண்டாகிறது. அதன் தகுதிக்கேற்றபடி பிரகாசம் அப்பிரகாசம் அமைந்துவிடுகிறது. அழியும் தன்மைத்தான பொருளில் மனம் பதிவுண்டபோது உடலின் பகுதியிலும் அறிவின் பகுதியிலும் தொழிற்பட்டு ஒளி மண்டலம அமைந்து கொண்டே உள்ளது. அழியும் தன்மையிராத ஆராய்ச்சியில் ஈடுபடுவது, பிறருக்கு இன்பம் தருவது, அன்பு செய்வது, ஜீவ காருண்யம் முதலிய சிந்தனைச் சேவைகள் அமையப்படும் போது பிரகாசமான ஒளி மண்டலம் அமைகின்றது.

இந்த உஷ்ணநிலை, ஒளி நிலைகள் உரசுதல் என்ற ஒரு சக்தியை அடிப்படையாக உள்ளது. மனம் என்ற சந்திரனும் அறிவு என்ற சூரியனும் உரசுவதால் அக்கினி தத்துவம் உதிக்கிறது. சூக்ஷமமான ஆகாயத்தில் உள்ள ஒளி அணுக்கள் உரசுவதால் ஒரு நாதம் படர்ந்தெழும். அதுவே நாதம், அல்லது வாக்கு என்று பெயர் பெறும். அது பருமை மென்மை காரணமாக நான்குவகைப்படும். பிறர் காதுகளில் கேட்பது (வைகரி) தன்னுள் மாத்திரம் உணரப்படுவது (மத்திமை), தனனுள்ளும் எழுத்தோசையினால் உணரப்படாத ஒருவித உணர்வு (பச்சியந்தி), மேலும் சூக்குமமான ஒரு தொனி தன் ஏகாந்தத்தில் உணரப்படுவது என்பவையாக விரியும். இத்தகைய சூக்கும நாதம், அக்கினியின் விளக்கமேதான்.

இதை அறிய சைவம் கண்ட வித்தை ஆன்மப்பிரகாசமுறும் நடராஜ வித்தையாகும். இதன் உண்மையான விளக்கத்தை உடலில் கண்டு அறிந்து அனுபவித்துச் சாதனம் செய்துவரின் அவன் திருவருபயால் ஆன்மாவின் விருத்தியான ஜீவபாவம் வலுத்து தேகபாவம் குறையும். ஜீவபாவம் வலுப்பதே சிவயோகம் ஆகும். ஜீவபாவம் வளர ஒளிமண்டல வாசிகளான அனு சதாசிவா, அஷ்ட வித்தியேசுவரர்களுடன் தொடர்பு கொண்டு உயிரில் ஒளி அணுக்கள் பெருகி அதற்கேறப உள்ளம் தெளிந்து உடலும் அதற்கேற்ப வாழமூலாதாரச் சக்கரமும் மாற்றியமைக்கப்படுகிறது. இதன் விரிவு தசாங்கம் என்ற திருவாசகத்தில் உணர்க. ஆகாயம் அதன் கீழுள்ள நான்கு

பூதங்களையும் லயம் செய்ய வல்லது. ஆகாய பூதத்தை இடமாகக் கொண்டு நடிப்பதே கூத்தப்பிரான் குறிக்கோள். ஆகாயபூத அணுக்கள் ஓய்வின்றிச் சதா சுழன்றுகொண்டிருக்கின்றன. அத்தகைய அணுக்களின் அசைவில் ஒரு வகை அறிவு உண்டு; ஒருவகை ஆற்றல் உண்டு; ஒருவகை பிரகாசமுண்டு. இவைகள் எல்லாம் ஜீவகோடிகளின் அண்டாகாயத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த அணுக்களின் சுழற்சிக்கேற்றபடி குணங்கள் அமைகின்றன. குணரகிதமும் அமைகின்றன.

அத்தகைய ஆற்றல் கொண்ட கூத்தனைக் காணு முறைதான் என்ன என்ற ஆராய்ச்சியைக் கண்டு தன்னுள தெளிந்தவர் சிவயோகியர் ஆவர். உடலில் அறிவின் ஆற்றல் சூரியன் என்ற பேருடைய சத்தியாகி மனிதனின் வலது கண்ணில் அஞ்ஞான தசையில் மறைந்துள்ளது. உடலில் மனத்தின் ஆற்றல் இடது கண்ணில் பொருந்தி சந்திரன் என்ற பெயருடைய சிவ சத்தியாக மறைந்துள்ளது. இறைவன் ஒளி மயமானவனுதல் பற்றி ஜீவனில் ஒளியாகிய சூரிய சந்திர ஒளிகளாகிய கண்களே இறைவனுடைய திருவடிகள் ஆகும். இவைகளை ஒருங்கே சேர்க்கும் ஆசாரியன் காட்டிய நெறியை உணர்ந்த அக்கினி கலை என்ற அசைவு மனிதனுடைய புருவ மத்தியில் உதித்து விடும். இதை உணரச் செய்யவே நடராஜ உருவத்தின் குறிக்கோள் ஏற்பட்டுள்ளது. இறைவன கால் கை கொண்டு உலகை நடத்தவில்லை என்பது ஞானிகளுக்குத் தெரியும். அவனுடைய சங்கற்பமே தொழிலைச் செய்து முடித்து விடும். இந்தக் கருத்தில் நடராஜ உருவத்தை உங்களிடம் நிலைநிறுத்தினுல் உங்களது சங கல்பமும் காரியத்தைக் கூட்டிவைக்கும்.

வலது கண்—உலக நெறியை ஊன்றி அழுத்தும் சூரியன் எனக்கொள்க.

இடது கண்—சிவசத்தி அம்சமான சந்திரன்; மேனேக்கம் கொண்ட வீசியகால் வலது புறம் நோக்கமாக வீசப்பட்டவை.

கால்கள் ஊன்றுவனவும் கைகள் கிரியையும் உடைமை பற்றிப் பாதங்களின் நிலைகள் கண்களில் நாட்டப்பட்டன. அவைகளின் காரியமான பார்வை கூத்தனின் கைகளாகும். வலது பக்கத்தில் நிறுத்திய இடக்கண் பார்வையை நினைவில் கொள். அதனால் நீ பாதுகாக்கப்படுவாய் என்று அபயகரம் அமைந்து விடும்.

இவைகளின் விருத்தியாக வலது கையில் உள்ள ஒலியைக்காட்டும் தமருகமும், இடது கையில் உள்ள ஒளியாகத் திகழும் அக்கினியான அம்சமும் உங்களிடம் உருப்பெற்று விடும். இவைகளைத்தான விந்துநாத மண்டலங்கள் என்று ஆன்றோர் வழங்குகின்றனர். சூரிய சந்திர சேர்க்கையினால அக்கினி உதிக்கிறதும், அக்கினிகலை உதிப்பதனால் ஒளிமண்டலமும் பரவாக்கு மண்டலங்களும் அமைந்து அவைகள் ஆகாயத்தில் விரிந்து படர்ந்து நாலாதிசையிலும் செல்லும் தகுதியைப் பெறும் ஆற்றல் உடைய கிரணங்களாவது பற்றி சிவபெருமானின் விரித்த செஞ்சடையாகக் காட்டினர். காமகலையாகக் கீழ் நோக்கிப் பாய்ந்து கெடுத்த காம நீக்கமே நெற்றியில் வந்து ஊர்த்துவ காமினியாகத் திகழ்ந்து சாதகனைச் சதாகாலமும் இன்ப ஊற்றில் திளைக்கச் செய்யும் கங்கா தேவியாகும். இத்தகைய சாதகனை அனுகினவரும் அந்தப் பரிசுத்த ஸ்நானம் பெறுவர். பரிசுத்தம் செய்வதனால் இறைவனுக்குத் தீர்த்தன என்ற பெயரிட்டுள்ளனர். ஆசாரியனும் தனது தண் கிரணத்தால் சீடரை ஞானஸ்நானம் செய்து அருள் நீராட்டி அருளுக்குத் தகுதிபெறச் செய்கிறான். நடராஜ தத்துவத்தின் சிறப்பு ஊர்த்துவ தாண்டவததில் இறுதியடைகிறது. அதுவே ஆனந்தத் தாண்டவம். இநத நிலை கைவரப்பெற்றோர் காளியின் இழுப்புச்சத்தியான பிரபஞ்சக் கவர்ச்சியை விட்டுச் சிவகாமியான அருளில் நிலைபெறறு தன்னுள்தானே ஆனந்தமயமாய் அறிவுடனும் ஆற்றலுடனும் பொருந்தி வாழ்வர் என்றபடி.

கிரியாவாதிகளுக்கும் உணர்த்தும் வெளித்தோற்றத்தில்சூக்குமம் உணர்ந்தபோது அகண்டாகாரம் சித்திக்கும். கிரியையின் வழியான சில இரகசியங்களைத் தன்னுள்

காண்பதே யோக நெறியாகும். அதன் பயனைப் பிரத்தியக்ஷமாய் அனுபவிப்பதே ஞான நெறியாகும். இத்தகைய ஞானநெறி எவ்வளவு புத்தகப்படிப்பினாலும் பெறக் கூடியதன்று. அருளினாலும், அருளில் ஈடுபட்டோரா லுமேதான் பெறமுடியும். இது தர்க்கவாதத்தினாலும் யுக்தி வாதத்தினாலும் பெறககூடியதன்று. எவ்வளவு புத்தகப் படிப்பாலும் ஒரு சிறு அளவு மட்டிலும்தான் உதவி கொடுக்கும். இத்தகைய பரிசுத்தம் செய்யும் தீர்த்தத்தை அறிதலே சிவயோகத்தின் முதல் நிலை என்பதை உணரவும். இந்த ஆகாய கங்கை ஒவ்வொரு மனிதரிடமும் உள்ளது. இதை அப்பியாசிகள் திட்டமாக அறிவர். கிரியாவாதிகள் கற்பனையில் திளைப்பர். இதைத் திருமூலர் இரண்டாம் தந்திரம் திருமந்திரத்தில் ஆறு மந்திரங்களினால் விளக்கு கின்றார்.

இரண்டாம் தந்திரம் 18 வது தீர்த்தம்

509 உள்ளத்தி னுள்ளே யுளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார்வினைகெடப்
பள்ளமு மேடும் பரந்து திரிவரிக்
கள்ள மனமுடைக் கல்வியில் லோரே

இதன் பொருள்:-உணர்வெனும் தீர்த்தம் உள்ளமாகிய சூக்கும உடல்களில் பல தீர்த்த நிலைகளாக உள்ளன. தங்களிடம் பொருந்தியுள்ள ஆன்மா கீழ்நோக்குதலாகிய வினையைக் கெடுக்கும்படி அதததகைய நீர் நிலைகளைத் தங்கள் தேகத்தில் உணர்ந்து அவைகளை வெளிப்படுத் திக்கொள்ள அறிவில்லாமல் பள்ளமாகிய முகத்தைக் கொண்டு மேலிருந்து கீழ் ஓடும் நதிகளில் படிந்தும் மேடான நிலையில் தேங்கியிற்கும் நீர் நிலைகளிலும் விரும்பிப் பாபவிமோசனம் செய்து தீர்த்தாடனம் எனற பேரால் அலைந்து திரிகின்றனர். இது தகுந்த உண்மைக் கல்வி இல்லாத வஞ்சகர் (கிரியாவாதிகள்) கற்றுக்கொடுத்த வஞ்சகரின் வழியான பொய்க்கூற்றாகும் என்றார். (1)

510 தளியறி வாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றுங்
குளியறி வாளர்க்குக் கூடலு மொண்ணான்
வளியறி வாளர்க்கு வாய்க்கினும் வாய்க்குந்
தெளியறி வாளர்தஞ் சிந்தையுள் ளானே

தளி என்ற சொல் குளிர்ச்சியையும் தீபத்தையும் குறிக்கும். சந்திரகலையைக்கொண்டு செய்யும் சந்திர தீபப் பிரகாசத்தினுல் இடது கண் பார்வையைக் குரு காட்டிய வழியில் செலுத்துவதினுல் தண்மையுடன வெளிப்பட்டு நிற்கும் ஒரு ஒளிநிலையேயாகும். குழியறிவு என்றது குளியறிவு என்ருயிற்று. இது ழகர ளகரத்திரிபு. அதாவது பிரபஞ்ச முகமாய்க் கீழ்நோக்கிய அறிவாகும். பிரபஞ்சத்தில் அழுந்தியுள்ள அறிவு உள்ளவர்கள் சிவப் பேறு பெறும் யோகியராகத் தகுதியுற்றவராக மாட்டார் என்றபடி

பிராணுயாமம் என்ற உசுவாச நிசுவாசப் பழக்கத்தில் காற்றை அடைத்துக் கும்பிக்கும் நெறியில் நிற்போர்க்கு ஒரு சமயம் சிவயோகம் சித்தித்தாலும் சித்திக்கலாம். அதனுல் இது நேர்முகவழி அன்று எனபதை உணரவும். சிவயோகத்திற்கும் மூச்சுப் பழக்கத்திற்கும் சம்பந்தம் சிறிதும் இல்லையென்பதை உணரவும். சிலர் இந்த உண்மை அறியாது பாம்பு சீறுவதுபோல் மூச்சை இழுத்து விட்டுக்கொண்டு திரிகின்றனர். இது உழைப்பின் வேலை. இதை வாசியோகம் என்று கூறிக்கொணடும் உளர். உண்மையை உணர்த்த வேண்டி மேற்கோள் காட்டுகிறேன். பதினெண் சித்தர் ஞானக் கோவை எனற நூலில் நிஜானந்தபோதம் என்ற ஒரு நூல் உள்ளது. அதில் ஒன்பது வாயில்......காட்டப்படடுள்ளது.

காலா லெழுப்புங் கருத்தறிவிக்க''

என்பது ஔவையார் விநாயகரகவல். இதுவே குருஉபதேசம் என்பதை அறியவும். இதன் மேல் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது காண்க.

வகையான வாசியது மனமும் கண்ணும்
மயங்காதே சிவாய மென்று புலம்பிடாதே
பகையாதே அட்சரங்கள் ஐம்பத்தொன்றும்
பரிபாடை யாயுரைத்த நாம பேதம்:
திகையாதே நமமென்றட் சரங்களொன்றும்
செபியாதே யறிவுகெட்ட மனித ரைப்போல்
நகையாதே மானிடர்பல் சாதி யென்று,
நம்பாதே நல்வழியின் காலைப் பாரே

இதுவே " திருத்தகுமதி " என்ற சங்கிரகலே. 21

திரிமூர்த்தி தேவர்முதல் மனிதரோடு
 சிவயோகம் பெற்றிருந்த மார்க்கந் தன்னைப்
பிரியமுட னெனைத்தொழுது கேட்ட பிள்ளாய்!
 பிங்கலையு மிடகலையும் மாறும் போதங்
கறிவான சுழுமுனையில் மனத்தை வைத்தே
 அரையாம மொருமன மாய்க் காக்கும் போது
குறியான சிவயோகம் சித்தி யாச்சு.
 கோடிசென்மம் சித்தரைப்போல் வாழலாமே

எட்டுத் திசையும் பதினறு கோணமு மெங்குமொன்ருய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாம்
கட்டிச் சுருட்டித்தம் கக்கத்தில் வைப்பர் கருத்திலவையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே.

என்ருர்.

இதன்மேல் சிவத்தைப் பற்றிய அகண்டாகார அறிவு உணர்ந்தவர்களது சித்தத்தின் கண்ணே மலமற்ற நிலையில் சிவன் விளங்கித் தோன்றுவான் என்றபடி.

511. உள்ளத்தி னுள்ளே யுணரு மொருவனைக்
 கள்ளத்தி னுலுங் கலந்தறி வாரில்லை
 வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
 பள்ளத்தி லிட்டதோர் பத்தலுள் ளாமே

நீரிறைக்கும் சாலுக்குப் பத்தல் என்பது பெயர். நீர்ச்சாலுக் குக் காரியம் கீழேயுள்ள நீரை மேலே கொண்டுவருத லாகும் அந்தச்சால் துவாரங்கள் பல உடையதாயின் நீரில் தண்ணீரை முகந்து கொண்டு மேலே வந்தாலும் இடையிலே நீர் சிதறுண்டு வெற்றுச்சால்தான் மேலே வரும். நீரிறைக்கும் காரியம் நடைபெறினும் பயனில்லை என்றபடி. அதுபோலவே " கள்ள மனமுடைக் கல்வியி லோர் " தெளிந்த சிவயோக நெறியில் நின்று அவரவர்தம் உள்ளத்தில் அறிந்து கொள்ளத்தக்கவனை அறிந்து கொள்ள இயலாமல் உலக நெறியில் நின்று விந்து நீக்கம் கொண்டு சிவகலை விளங்கப்பெருது கெடுகிருர்கள் என்றபடி.

512 அறிவா ரமரர்க ளாதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்று வலங்கொண்
மறியார் வளைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனன்மூழ்கப் புண்ணிய ராமே

ஆகாயபூதத்தினிடமாக நிறைவு கொண்டு வலப்பாகத்தின் கண்ணே பொருந்திய பிங்கலன் என்ற சூரியனுடன் பொருந்தி வருபவர், சங்கநாதத்துடன் கூடிய ஆகாய கங்கையில் பொறிகளோடு மூழ்கிச் சிவபுண்ணியம் எய்தப் பெறுவர். இந்த விதமாகவே ஆதிப்பிரானை அமரர்கள் அறிந்துணர்ந்தார்கள் என்றபடி. 4

513 கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்ட
லுடலுறத் தேடுவார் தம்மையொப் பாரிலார்
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்
றுடலிற் புகுந்தமை யொன்றறி யாரே

காமக்கழிவு கடல் பிரதேசமாகிய சிறு நீர் நிலையான சுவாதிஷ்டான நிலை ஆகும். குளம் என்றது புருவ நடுவான விந்து நிலை. முன்னது காரியநிலை. பின்னது காரண நிலை. அக்கினி காரிய நிலையில் காமாக்கினியாக உள்ளது. இது சுக்கில நீக்கம் செய்கிறது. காரண நிலை புருவ மத்தியில் ஒளி நிலையுள்ளது. ஒளியான புருவ மத்தியில் மனம் பதிவு கொண்டு சிறப்படைந்தால் கீழுள்ள சுக்கில நிலை கெடும். சுக்கில நிலை கெட்டு ஒளிநிலை யுண்டாவதையே சிறப்பித்துக் "கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்ட லுடலுறத் தேடுவார்" என்றார். இவருக்குச் சமான மானவரில்லை யென்பதை 'தம்மை யொப்பாரிலார்'' என்றார். உருத்திர நிலை ஜீவனைக் கீழ் நோக்கிச் செலுத்துவது. சிவத்தினியல்பு ஜீவனை மேல் நோக்கிச் செலுத்துவது பற்றித் திடமுற்ற நந்தி என்றார். (திடமான அக்கினிப்பிரகாசம் பெறும் சிவகலையேதான் நம்+தி ஆகும்) இந்த சிவகலையே மேல் நோக்கி மூலாதாரம் முதலாகப் புகுந்து பிர்மரந்திரத்தில் வெளிப்படுகிறது. இதைச் சாமான்னியர்கள் உணரவில்லை என்றபடி. யோகிகளே ஊர்த்துவ காமினி என்ற சிவகலையை உணர்வர் என்றபடி.

514 கலந்தது நீர துடம்பிற் கறுக்குங்
கலந்தது நீர துடம்பிற் சிவக்குங்
கலந்தது நீர துடம்பில் வெளுக்குங்
கலந்தது நீர் நிலங் காற்றதுவாமே

இந்த மந்திரத்தில் சிவயோகப் பயன் கூறுகிறார். உணர்வு என்ற சிவ நீரில் திளைப்போருக்கு அமையக்கூடிய மாற்றத்தை இங்கு கூறுகிறார்.

இரத்தம் கெட்டு வெளுப்பான நிலையில் உள்ளவர்களுக்கு நல்ல சுறுசுறுப்பான இரத்த ஓட்டம் உண்டாகும். அதன் பயனாக சிவந்த மேனியர் மேனி செந்நிறம் நன்கு பெருகி நிற்பர். உடலிலுள்ள ரோமங்கள் கருமையடையும். உடல் பிரகாசமுற்று ஜொலிக்கும்.

இந்த நீர் சிவகலையானது பற்றி அக்கினி கலை சுழுமுனை யென்ற பெயருடன் மூல முதல் பிரமரந்திரம் முடிய உள்ள ராஜ வீதியில் உள்ளது. அதனால் அதன் ஆகர்ஷிக்கப்பட்ட நிலம் நீர், காற்று என்ற பூதங்களைத் தன்னுடன் கொண்டு செலுத்துவதாகி தேஜோ மண்டலமாகிய ஆகாயக் கூறாகிய சதாசிவத்தானமாகிய பிர்மரந்திரத்தில பொருந்துகிறது. இதன் நிலை தோளுக்கு மேலுள்ள ஒளிமண்டல அமைவு. இதைச் சோமவட்டம் எனறும் கூறுவர். இத்தகைய சந்திரயோகத்தையே உடலுடன் கூடிய உள்ளமும் சிவத்துடன் பொருந்தி வாழலாம் என்பதைத் திருமூலர் சந்திரயோகம் என்ற பகுதியில் மூன்றும் தந்திரத்தினிறுதியில் கூறுகிறார். அம்மந்திரங்களை நன்கு தெளிக

உணர்விந்து சோணி யுறவினன் வீசும்
புணர்விந்து வீசுங் கதிரிற் குறையி
லுணர்வு முடம்பு முவையொக்க நிற்கி
லுணர்வு முடம்பு மொருகால் விடாமே 29

விடாத மனபவ னத்தொடு மேவி
நடாவு சிவசங்க நாதங் கொளுவிக்
கடாவிடா ஐம்புலன் கட்டுண்ணும் வீடு
படாதன வின்பம் பருகா ரமுதமே 30

அமுதப் புலன்வரு மாற்றங் கரைமேற்
குமுழிக்கத் தற்சுட ரைந்தையுங் கூட்டிச்
சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு
நமனில்லை நற்கலை நாளில்லை தானே 31

உண்ணீ ரமுத முறுமூற லைத்திறந்
தெண்ணீ ரிணையடித் தாமரைக் கேசெலத்
தெண்ணீர்ச் சமாதி யமர்ந்துதீ ரானலக்
கண்ணுற்றோ டேசென்று கால்வழி மாறுமே 32

மாறு மதியுமா தித்தனு மாறின்றித்
தாறு படாமற் றண்டோடே தலைப்படி
லூறு படாதுடல் வேண்டு முபாயமும்
பாறு படாவின்பம் பார்மிசைப் பொங்குமே 33

விந்து ஜயம் என்ற தலைப்பு

ஒழியாத விந்து வுடல்நிற்க நிற்கும்
அழியாப் பிராணன் அதிபலஞ் சத்தி
ஒழியாத புத்தி தபஞ்செப மோனம்
அழியாத சித்தியுண் டாம்விந்து வற்றிலே

1949 வற்ற அனலைக் கொளுவி மறித்தேற்றித்
துற்ற சுழியனல் சொருகிச் சுடருற்று
முற்று மதியத் தமுதை முறைமுறை
செற்றுண் பவரே சிவயோகி யாரே 13

1950 யோகியும் ஞானியும் உத்தம சித்தனும்
யோகியும் ஞான புரந்தர னுவோனும்
மோக முறினு முரையமுர் தன்போனும்
ஆகிய விந்து அழியாத அண்ணலே 14

1951 அண்ணல் உடலாகி யவ்வனல் விந்துவும்
மண்ணிடை மாய்க்கும் பிராணனும் விந்துவுங்
கண்ணுங் கனலிட கட்டிக் கலந்தெரித்
துண்ணில் அமிர்தாகி யோகிக் கறிவாமே 15

1952 அறியா தழிகின்ற வாதலால் நாளும்
பொறியால அழிந்து புலம்புகின் றார்கள்
அறிவாய் நனவி லதீதம் புரியச்
செறிவா யிருந்து சேரவே மாயுமே 16

1956 மேலா நிலத்தெழு விந்துவும் நாதமுங்
கோலால் நடத்திக் குறிவழி யேசென்று
பாலாம் அமுர்துண்டு பற்றறப் பற்றினல்
மாலான தும்மாள மாளுமவ் விந்துவே 20

உண்மையான சிவயோகியரின் சந்நதியில் இருக்கும் தகுதியுள்ள சீடனுக்கும் சிவயோகியின் உணர்வாகிய பரிசுத்த தேஜசு பாய்வதில் உள்ளத்தில் ஒருவகை உவகையும், உடலில் ஒருவகை குளிர்ச்சியும் ஒரு கனமற்ற இன்ப நிலையும் உதித்து விடும். முதலில் சிறிதளவாக இருப்பினும் நீடன்னாள் பயிற்சியில் மனம் ஓட்டத்தை விட்டு அசையாது சிரசில் மேலுள்ள இன்பவெளியில் நிலைகொள்ளும். அந்த நிலையில் ஐந்து புலன்களும் கட்டுண்டு அசைவற்று நின்றுவிடும். பேசுதலைச் செய்யும் மனமும், வெளியிடாது அறியும் புத்தியும் ஒன்றாகப் பதிவதே சோம சூரிய சேர்க்கையாயிற்று. அப்போது உதிக்கும் பிரணவகலையே சூக்கும கலையாகி உள்ளுணர் ஓசையாகி புலன்களைக் கட்டி நிற்கும் ஊர்த்துவ முகமுள்ள சகஸ்ரதளமாக அமைந்துவிடும்.

கருணையந்தாதி

(வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்)

[சென்ற மாத இதழின் தொடர்ச்சி]

பவக்கொடுந் தீவினைக் கேபற்று மைந்து பகைஞர்செயும்
அவக்கொடுஞ் சூழலிற் பட்டுழல் வேனைவந் தஞ்சலென்பாய்
தவக்கொழுந் தேதற் றிருவவி நாசி தனின்முளைத்த
சிவக்கொழுந் தைப்புணர் கொம்பே கருணைத் திருமகளே. 20

திருவுந் திறமையுஞ் செவ்வியுங் கல்வியுஞ் செல்வமுஞ்சீர்
உருவு மொழுக்கமு முற்றிட லாமறை யுச்சிக்கெட்டா
திருவு முருவு மகண்டமு மண்டமு மானவனை
மருவுங் கருணை வடிவைத் தியானத்தில் வைத்தவர்க்கே. 21

வைத்தனி வேலன்ன கண்ணியர் கொங்கைக்கும் வாளரவின்
பைத்தலை யல்குற்கு மேங்கிக்கண் ணுடியிப் பாருலகில்
பொய்த்தலை யாதருள் வைத்தே துணைசெயிப் போதுகண்டாய்
நெய்த்தலை மூவிலைச் சூலங்கை தாங்கிய நீயெனக்கே. 22

எனக்குத் துணையம்மை நீயன்றி வேறிலை யீன்றசிறார்
தனக்குப் பரிவது தாயன்றி மற்றிலைத் தாரணியில்
உனக்குப் பிறிதிங்கு யானுப சார முரைப்பதென்னே
கனக்கும் புவனங்கள் யாவையு மீன்ற கனங்குழையே. 23

குழலுந் திருச்செவிக் குந்தள வோலையுங் கோலவண்டு
சுழலும்பைங் காந்தளஞ் சூடகக் கையும்பொற் றோளுமணிக்
கழலுமின் பாடக மும்பூஞ் சிலம்புங் கலிக்கும் பொற்றாள்
நிழலுமென் னாவிக் கொருதுணை யாய்வந்து நின்றனவே. 24

நின்றாலும் வீற்றிருந் தாலுந்துய்த் தாலும் நெடிதுநெறி
சென்றாலுங் கண்டுயின் றாலுமென் சிந்தையுன் சேவடிக்கண்
ஒன்றா யிருப்பதல் லான்மற்றும் வேறில்லை யுத்தமியே
அன்றால மீசற் கமுதாக் கியமெய் யருண்மயிலே. 25

மயிலே களப மடப்பிடி யேயிம வான்மகிழ்ந்து
கயிலேச னுக்கருள் கண்மணி யேகக னத்திறைக்கும்
வெயிலே கருணை விளக்கேதென் புக்கொளி வேதவனக்
குயிலே யருட்கொடி யேயடி யேன்றொண்டு
கொண்டவளே. 26

கொண்டலை வென்ற குழலிய ராசைக் கொழுங்கனியை
யுண்டலையாதுன் னருள்வழிக் கேயுயி ருய்யச்செய்வாய்
விண்டலைக் குங்குட முட்கனித் தேறல் விளைந்தொழுகு
தண்டலைக் கற்பகப் புக்கொளி யூர்ச்சிவ சங்கரியே. 27

கரியுங் கவிகையுந் தேரும் பதாகினி யுங்கவனப்
பரியுஞ் சிவிகையும் பன்மணி யாரமும் பாலமுதஞ்
சொரியுங் கருணைச் சவுந்தரி நூபுரச் சோதிதுன்றி
விரியுங் கழற்கன்பு செய்வார்க் குண்டான விருதுகளே. 28

விருதிட்டவென்றி மகிடா சுரன்புய வெற்பொடியப்
பொருதிட்ட வாகைப் பொலன்கொடி யேயுனைப்
போற்றியுள்ளங்
கருதிட்ட போதுங் கவலையுண் டோவுன் கருத்துக்கிது
பொருதிட்ட மோவுரை யாயறி யார்மடப் பேதமைக்கே. 29

தமைப்புகழ் வார்பெருஞ் செல்வம் வந்தாற்றெய்வச்
சார்பையுன்னார்
சுமைப்படுத் துன்ப மிடிப்படில் வேதனைத் தூற்றிடுவார்
எமைப்புரந் தாண்டரு ளுங்கரு ணாலய வீஸ்வரிதன்
அமைப்பிது வாமென் றுணரா ருலகத் தறிவிதுவே. 30

அறியாமை யிற்சிறி யோர்பிழை யாற்றி லறஞ்சிறந்த
நெறியார் பொறுத்தருள் கூர்வதன் றேகொள்கை
நீர்மையில்லா
வெறியாமென் புன்மதி மாற்றிமெய் ஞானம் வியந்தளிக்கப்
பொறியா முனக்கன மேயிம யாசல புத்திரியே. 31

புத்தா ரமுத மொழுகுஞ்செவ் வாம்பல் புரிகுழலும்
முத்தார முஞ்சண்பை யார்க்கமு தூட்டு முலைத்தடமுங்
கொத்தாருங் கிண்கிணிப் பொற்றுள்க ளுங்களி
கூர்ந்துதொழப்
பத்தா யிரங்கண் படைத்தானிலைமலர்ப் பண்ணவனே. 32

பண்ணீர்மை சூழ்பழம் பாட லிற் புக்கொளிப் பார்பதியைக்
கண்ணீர் பெருகத் துதித்துரு காமல்வெங் கானலைமான்
தண்ணீரென் றேடித் தளர்வது போலென்றுஞ் சஞ்சலத்திற்
புண்ணீர்மை கொண்டுநெஞ் சேகளித் தாய்பல
போதையுமே. 33

போதாவென் புன்மொழிப் பாடலை வேதம் புகுந்ததிருக்
காதாரக் கேட்டெம் பிராட்டியு முள்ளக் கருணையினுற்
சீதா பதிபர வுங்கரு ணாலயச் செல்வியென்னை
மாதா வுதரத் துறுதடைத் தாள்சென்ம வாசனையே. 34

வாசலை யொன்பதை வைத்தே யியற்றி வழும்பையென்பின்
மூசலைத் தோலின் புறம்போர்த்து மூடி முடித்துலகின்
வீசலைப் பாச வினைக்கயிற் றுற்கட்டி விட்டசடத்
தூசலை யாற்றுகி லேன்கரு ணாலய வோதிமமே. 35

ஓதி யுணர்ந்தமெய் ஞானிய ருள்ளத் துதித்தபரஞ்
சோதியை யானந்த சுந்தர வல்லியைத் தொல்லைமறைக்
காதியை யாவர்க்கு மெட்டாத புக்கொளிக் கண்ணுதல்செம்
பாதியை யென்சிறு புன்றுவி லென்சொலிப் பாடுவதே. 36

பாடுஞ் செழுந்தமிழ்ப் பாமாலை யென்றுமுன் பாதத்துக்கே
சூடும் படிக்கருள் தோற்றிவைப் பாய்புல்லர் சூழலிற்போய்
நாடு மகிழ்ச்சியை நானிங் குறுமலுன் றுண்மலர்த்தாள்
கூடும் படிசன் மார்க்கத்தில் வைத்தருள் கூட்டுவையே. 37

வையேறு செந்துயிர் வாய்ப்பசுங் கிள்ளை வசனமலர்க்
கையேற வைக்த கருணாம் பிகையைக் கருதுகிலீர்
பொய்யேறு மிப்புன் குரம்பையைப் போற்றிப் புதுக்கிமெத்த
மெய்யேயென் றுன்னி யிருந்தீர்பின் னந்தகன்
வேதனைக்கே. 38

(தொடரும்)

மதிப்புரை

சிதம்பரம் கோயில் வழிபாடு: உரை நடை சச்சிதானந்த தீக்ஷிதர்; செய்யுள்: புலவர். வெ. வை. சிவசங்கர தீக்ஷிதர், நடன குஞ்சிதபாத சபை, 6 தெற்கு சந்நிதி, சிதம்பரம். ரு 1-00. பக்கம் 108.

இது ஒரு செய்யுள் நூல். நூற்று ஐம்பது விருத்தங்கள் உடையது. சிதம்பர தலத்தில் அமர்ந்துள்ள, முக்குறுணி விநாயகர், கற்பக விநாயகர் தொடங்கி, பிர்ம சண்டிகேசுவரர் வரையில் இத்தலத்தில் உள்ள எல்லாத் தெய்வங்களுக்கும் இதனுள் தோத்திரம் சொல்லப்பட்டுள்ளது. தலத்திலுள்ள வில்வ விருட்சம், சிவகங்கைத் தீர்த்தம், கற்பக விருட்சம், பஞ்சாக்கரப்படி, சிதம்பர ரகசியம், பாதுகை, புருஷாமிருகம், பரமானந்த கூபம் ஆகிய எல்லாப் பொருள்களுக்கும் இதனுள் தோத்திரங்கள் உள்ளன. ஆலயத்திலுள்ள எல்லாத் தெய்வங்களுக்கும், எல்லா ஆவரண மூர்த்திகளுக்கும் தனித் தனித் துதிப் பாக்கள் உள்ளன. அன்றியும் இங்குள்ள கோவிந்தராசர், கருடன், அநுமார், ஆதிசேஷன், நரசிம்மர், வேணு கோபாலன் முதலான வைணவத் திரு உருவங்களுக்கும், தனித் துதிப்பாடல்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த முறையில் இத் தோத்திரத் தொகுதி ஒரு புதிய தன்மை பொருந்தியுள்ளது. ஆசிரியர், புலவர். வெ. வை. சிவசங்கர தீக்ஷிதர், தில்லைவாழ் அந்தணர் மரபில் வந்தவர். புலவர் பட்டமும் பெற்றவர். பாக்கள் எளிய தமிழில் பிழையின்றி அமைந்துள்ளன. ஆலயத்தில் என்னென்ன மூர்த்திகள் எந்த எந்த இடங்களில் அமர்ந்துள்ளனர் என்று அறிந்து வழிபடுவதற்கு இப்புத்தகம் பேருதவியாய் இருக்கும். நூலின் தொடக்கத்தில் திருவுருவங்கள்பற்றியுள்ள விளக்கமான ஒரு குறிப்பு பெரிதும் பயன்படவல்லது. (மு. அ.)

புரட்டாசித்திங்கள் சிறப்பு நாட்கள்

5 (21-9-70) உரோகணி—திருநாளைப்போவார் நாயனார் விழா
12 (28-9-70) பூரம்—அருணந்தி சிவாச்சாரியார் விழா
23 (9-10-70) உத்திராடம்—ஏனாதிநாத நாயனார் விழா
26 (12-10-70) சதயம்-நரசிங்கமுனையரைய நாயனார் விழா
29 (15-10-70) அசுவனி—உருத்திரபசுபதி நாயனார் விழா

மதிப்புரை :—திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய கழுமல வளநகர் பதிகம் என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். நம் சமாஜ முன்னாள் செயலாளர் திரு. மா. ப. தியாகராஜன் அவர்கள் B. A. அறுபது ஆண்டு எய்தியதன் நினைவாக இது வெளியிடப்பெற்றது. இப்பதிகத்தின் ஈற்றுப்பாட்டில்,

.........................'' உரைசெய்து நவில்வார்
ஞானசம் பந்தத் துறுபிணி நீங்கி உள்ளமும்
ஒருவழிக் கொண்டு
வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற் காணையும் நமதே.''

என்று பயன் கூறப்பட்டிருக்கிறது. ஆதுகருதி ஓரன்பர் இப்பதிகத்தை ஓதி தம் தீரா வயிற்று வலியையும் போக்கிக் கொண்டதாகத் தெரிகிறது. ஆகையால் இப்பதிகத்தை யாவரும் ஓதிப் பயன் படுத்தி யுய்யட்டும் என்னும் எண்ணத்தால் அன்பர் வெளியிட்டிருக்கின்றார். விலை குறிக்கப்பெறவில்லை. அஞ்சற் செலவு மட்டும் அனுப்பினால் (20 காசுகள்) அவர்களுக்கு நூல் அனுப்பிவைக்கப் பெறும். வேண்டுவோர் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். மா. ப. தியாகராஜன் B. A., "கனகவிலாஸ்" 14, வாரன்சாலை, திருமயிலை, சென்னை-4. (அம்பை)

ஓர் அறிவிப்பு

நம் சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு மாநாடுகள், கோடை வகுப்புகள், சிறப்பு மாநாடுகள் மாவட்டவாரியாக நடைபெற்ற விபரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் 1929 ல் திருநெல்வேலியில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் ஒரு சிறப்பு மாநாடு நிகழ்ந்தது. 1931ல் சமாஜ 26ஆம் ஆண்டு விழா திரு ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் தூத்துக்குடியில் நிகழ்ந்தது. சைவ இளைஞர் மாநாட்டுக்கு திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்களும் சைவ மாதர் மாநாட்டுக்கு திருமதி திருவரங்க நீலாம்பிகையம்மையார் அவர்களும் தலைமை தாங்கினர். 1944ல் சமாஜக் கோடை வகுப்பு பாவநாசத்தில் நிகழ்ந்தது. அதன் பின்னர்

சமாஜச் சார்பான கூட்டங்கள் அம்மாவட்டத்தில் ஒன்றும் நிகழவில்லை. இவ்வாண்டு சமாஜ 65ஆம் ஆண்டு விழா திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழவேண்டிய முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சமாஜ மாநாடு நிகழும் இடம், தேதி முதலியன பற்றி அடுத்த இதழில் செய்திகள் வெளிவரும்.

	சமாஜ மாநாடுகள் (மாவட்ட வாரியாக)	ஆண்டு மாநாடு	கோடை வகுப்பு	சிறப்பு மாநாடு
1.	குமரிமாவட்டம்	0	0	0
2.	நெல்லைமாவட்டம்	1	1	1
3.	மதுரை மாவட்டம்	2	—	—
4.	இராமநாதபுரம் மாவட்டம்	7	1	—
5.	தஞ்சை மாவட்டம்	8	2	3
6.	திருச்சி மாவட்டம்	3	—	—
7.	புதுவை மாநிலம்	2	—	—
8.	சேலம் மாவட்டம்	1	—	—
9.	கோவை மாவட்டம்	4	2	—
10.	நீலகிரி மாவட்டம்	—	2	—
11.	தென் ஆர்க்காடு மாவட்டம்	11	1	3
12.	வட ஆர்க்காடு மாவட்டம்	3	—	—
13.	செங்கற்பட்டு மாவட்டம்	5	1	—
14.	சென்னை மாவட்டம்	14	—	5
15.	மைசூர் மாநிலம்	—	—	1
16.	மலேசியா நாடு	—	—	1
17.	ஈழநாடு	3	—	—
		64	10	14

(துணையாசிரியர்)

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.